# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க.*
கலை, களை, கழை

43. *குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடி.*
சிறுகதை ஆசிரியர், முதல் பாதி நகரம்

44. முன்னெழுத்து அரசன், பின்னெழுத்து தமிழ் மாதம்.

45. *புதிர்க்கான விடையைக் காண்க.*
அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பறங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே இறகொடிந்து இறந்ததாம் - என்ன?

46. *உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.*
கிணற்றுத் தவளை போல.

47. *தமிழாக்கம் தருக.*
Knowledge of languages is the doorway to wisdom.

48. If you want people to understand you, speak their language.

*கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக.*
49. Bibiliography

50. Platform

*****



பெயர் : பிரிவு : பதிவு எண்.

## ஒரு மதிப்பெண் தேர்வு – 1

### பன்னிரண்டாம் வகுப்பு

### தமிழ்

நேரம் : 1.00 மணி மதிப்பெண்கள்: 50

பலவுள் தெரிக: 50x1=50

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) நன்னூல்

3. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) அடி எதுகை, சீர் மோனை ஆ) அடிமோனை அடி எதுகை
இ) சீர்மோனை, சீர் எதுகை ஈ) சீர் எதுகை, அடிமோனை

4. <u>பொய்யா</u> வானம் புதுப்பெயல் பொழிந்தென - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல்

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு - கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
அ) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ஆ) பொதிகையில் தோன்றியது
இ) வள்ளல்களைத் தந்தது
i) அ மட்டும் சரி ii) அ, ஆ மட்டும் சரி
iii) இ மட்டும் சரி iv) அ, இ மட்டும் சரி

7. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும். - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறுபடுகிறது. ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

8. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி 2 தவறு

9. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர். ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது. ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

10. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

11. "பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" என்று கூறும் நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) தண்டியலங்காரம்

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ....................
   அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
   இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

13. இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
   அ) தி.சு.நடராசன் ஆ) பாரதியார்
   இ) அய்யப்பமாதவன் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

14. ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கும் கி.ராஜநாராயணனின் குறுநாவல்
   அ) மந்தை ஆ) கிடை இ) செம்மறி ஈ) வெள்ளாடு

15. தமிழில் திணைப்பாகுபாடு .................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

16. தி.சு.நடராசன் பணியாற்றாத பல்கலைக்கழகம்
   அ) வார்சா ஆ) மதுரை காமராசர்
   இ) பாரதியார் ஈ) மனோன்மணீயம் சுந்தரனார்

17. ................ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி தண்டியலங்காரம் எழுதப்பட்டது.
   அ) காவியதர்சம் ஆ) மேகதூதம் இ) சாகுந்தலம் ஈ) அமரகாவியம்

18. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" இந்நூற்பா அமைந்த நூல்
   அ) இலக்கண விளக்கம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) அகத்தியம்

19. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்
   அ) வீரச்சோழியம் ஆ) மாறனலங்காரம் இ) முத்துவீரியம் ஈ) தொன்னூல் விளக்கம்

20. ஆணும் பெண்ணும் ஓருயிரின் இரண்டு .............. என்றெழுது.
   அ) கரங்கள் ஆ) கண்கள் இ) தலைகள் ஈ) கால்கள

21. பாரதி இவருக்குக் கடிதம் எழுதவில்லை.
   அ) குத்தி கேசவர் ஆ) எட்டயபுர ஜமீன் இ) நெல்லையப்பர் ஈ) பாரதிதாசன்

22. ................. எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   அ) ஆய்த ஆ) உயிர் இ) மெய் ஈ) உயிர்மெய்

23. உலகப்புவி நாள்
   அ) ஏப்ரல் 2 ஆ) ஏப்ரல் 12 இ) ஏப்ரல் 22 ஈ) ஏப்ரல் 30

24. "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே" என்று திட்டவட்டமாகக் கூறியவர்
   அ) டேவிட் சாம் ஆ) டேவிட் யங் இ) டேவிட் போர்டு ஈ) டேவிட் கிங்

25. பசுமைக்குடில் வாயுக்கள் பட்டியலில் இல்லாதது
   அ) ஓசோன் ஆ) மீத்தேன்
   இ) நைட்ரஜன் ஈ) கார்பன் டை ஆக்சைடு

26. கடந்த ஆண்டு நாகை முதலான டெல்டா மாவட்டங்களைத் தாக்கிய புயல்
   அ) ஃபானி ஆ) கஜா இ) ஒகி ஈ) டையூன்

27. ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண்
   அ) வெள்ளச் சமவெளி ஆ) ஆற்றங்கரை இ) கழிமுகம் ஈ) அணைக்கட்டு

28. அய்யப்ப மாதவன் இயக்கிய கவிதைக் குறும்படம்
   அ) நேற்று ஆ) இன்று
   இ) நாளை ஈ) நேற்று இன்று நாளை

29. கன்னம் என்பதைக் குறிக்க நக்கீரர் பயன்படுத்தும் சொல்
   அ) புடையூஉ ஆ) கொள்ளியர் இ) ஆர்கலி ஈ) கவுள்

30. முதல் கல் சிறுகதையின் முதன்மை கதை மாந்தர்
   அ) அல்லி ஆ) மாரி இ) மருதன் ஈ) காளியப்பன்

31. உத்தமசோழன் நடத்திய திங்களிதழ்
   அ) மனிதத்தீவுகள் ஆ) குருவி
   இ) கிழக்கு வாசல் உதயம் ஈ) சந்திரரோதயம்



32. ***இலக்கணக்குறிப்பு தருக.***
   வியர்வை வெள்ளம்

33. ***உறுப்பிலக்கணம் தருக.***
   வியந்து

34. ***பொருத்தி விடை தேர்க.***
   அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்
   இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்
   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

35. அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
   ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
   இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
   ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன
   அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 2, 1, 4 ஈ) 3, 1, 2, 4

36. அ) அவன், அவள், அவர் - 1) உளப்படுத்தாத தன்மைப் பன்மை
   ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை
   இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மை பன்மைப் பெயர்கள்
   ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்
   அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

37. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

38. ந, ண, ன / ற, ர / ல, ள, ழ ஆகிய எட்டு எழுத்துகளில் ................................மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். (நிரப்புக)

39. விரிவாக்கம் தருக. UNFCCC

40. ***சரியானதைத் தேர்ந்தெடு.***
   அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது
   ஆ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது

41. ***பிரித்துப் புணர்ச்சி விதி தருக.***
   அ) உன்னையல்லால்

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net



38. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

39. ***பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக்குக.***
காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

40. ***கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.***
முன்

***கலைச்சொற்களின் தமிழாக்கம் தருக.***

41. Tips

42. Visa

***தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.***

43. ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

44. எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

45. ***தூய தமிழில் மாற்றுக.***
வெள்ளங்காட்டி கெராமுனு சிட்ட கையெழுத்து வாங்கனும்

***நிரப்புக.***

46. சாலைப் போக்குவரத்து உதவிக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்....................

***சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.***

47. முன்னாள் புரிவினைகள் முற்றும் தவறாமல் ............. ....நமைவந்து பீடிக்கும் - அன்று தினையிட்டால் இன்று தினைவிளையும் அன்றிப் .....................வாய்க்கும் பனை (பின்னாள், பனையிட்டால்)

48. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.***
பலகை

***தமிழாக்கம் தருக.***

49. Education is a basic human right.

50. There are no travelling libraries to reach the village people.

*****

www.TrbTnpsc.com



| பெயர் : | பிரிவு : | பதிவு எண். | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# ஒரு மதிப்பெண் தேர்வு – 2

## பன்னிரண்டாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 1.00 மணி | மதிப்பெண்கள்: 50

பலவுள் தெரிக: 50x1=50

1. "விண்வேறு ; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்
அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு ☐

2. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார்? யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்கிரீவன் ஈ) இராமன் சவரி ☐

3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன.
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நீதியும் சுங்கமும் ☐

4. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல் ☐

5. ***பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.***
*நல்லார் நயவர் இருப்ப நயம்இலாக்*
*கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை*
*வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய*
*நினைப்ப வருவதொன் றில்*
அ) இருவேறு உலகத்து இயற்கை ; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.
ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு
இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து ஊறும் ☐

6. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி ☐

7. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும் ☐

8. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி ☐

9. கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) எதிர்பார்ப்போடு செய்த உதவி ☐

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே". - என்னும் பாரதி பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்பமுறை
இ) தாயவழிச் சமூகமுறை ஈ) தந்தை வழிச் சமூகமுறை

11. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

12. போக்குவரத்தைச் சீர்செய்ய உதவாத குறியீடுகள்
அ) விளம்பரக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்

13. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

14. மனித சமூகத்தின் அடிப்படை அலகு
அ) கிராமம் ஆ) பள்ளிக்கூடம் இ) குடும்பம் ஈ) நகரம்

15. ஜலாலுத்தீன் ரூமியின் சூஃபி தத்துவப் படைப்பு
அ) திவான் - ஈ - ஷம்ஸ் ஆ) திவான் - ஈ - தப்ரீஸி
இ) மஸ்னவி ஈ) திவான் - ஈ - ஷம்ஸ் - ஈ - தப்ரீஸி

16. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர்
அ) இராம காதை ஆ) இராமாயணம் இ) இராமசரிதம் ஈ) இராமாவதாரம்

17. குடும்பம் என்ற சொல் முதன்முதலில் பயின்று வந்துள்ள இலக்கியம்
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) தொல்காப்பியம் ஈ) திருக்குறள்

18. கழுகு வேந்தன் எனக் குறிப்பிடப்படுபவர்
அ) சடாயு ஆ) சுக்ரீவன் இ) சவரி ஈ) குகன்

19. "வேட்டியைக் கையிலேந்தியபடி தொபுக் தொபுக்கென்று மேலூரை நோக்கி ஓட ஆரம்பித்தார்" - யார்?
அ) முத்தையன் ஆ) வெள்ளைச்சாமி இ) பங்காருசாமி ஈ) ஆறுமுகசாமி

20. 2014-ல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற பூமணியின் புதினம்
அ) அஞ்ஞாடி ஆ) வெக்கை இ) பிறகு ஈ) கொம்மை

21. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்
அ) சென்னை ஆ) வேலூர் இ) கன்னியாகுமரி ஈ) கடலூர்

22. 'தமிழ்த் தாத்தா' என்றழைக்கப்படுபவர்
அ) திருவள்ளுவர் ஆ) தெ.பொ.மீ இ) ஜி.யு.போப் ஈ) உ.வே.சா

23. ஒற்றுப்பிரிவுக்கான கால எல்லை
அ) ஒரு வருஷம் ஆ) இரண்டு வருஷம் இ) மூன்று வருஷம் ஈ) நான்கு வருஷம்

24. சுரதாவின் நூல்களுள் அல்லாதது
அ) பால்வீதி ஆ) துறைமுகம் இ) தேன்மழை ஈ) மங்கையர்க்கரசி

25. சி.மணி நடத்திய சிற்றிதழ்
அ) எழுத்து ஆ) ஒளிச்சேர்க்கை இ) நடை ஈ) சந்திரன்

26. பொருத்தி விடை தேர்க.
வல்லினம் மிகும், மிகாத் தொடர்களைப் பொருளறிந்து பொருத்துக.
அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்
அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 4, 2, 1, 3



27. அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

28. அ) உரிமைத் தாகம் - 1) பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி - 2) பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி - 3) பக்தவத்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை - 4) சாகித்திய அகாதெமி
அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

29. அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா
அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

30. அ) யாவரும் கேளிர் - 1) தமிழர் நற்பண்பின் மலர்ச்சி
ஆ) சிறியோரை இகழ்தல் இலமே - 2) தமிழர் நற்பண்பின் தொடர்ச்சி
இ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - 3) தமிழர் நற்பண்பின் வளர்ச்சி
ஈ) காக்கை குருவி எங்கள் ஜாதி - 4) தமிழர் உயிர்பண்பின் முதிர்ச்சி
அ) 3, 1, 4, 2 ஆ) 3, 4, 1, 2 இ) 3, 1, 2, 4 ஈ) 3, 2, 4, 1

31. அ) வித்தியாரம்பம் - 1) கல்விப் பயிற்சி
ஆ) வித்தியாப்பியாசம் - 2) கல்வித் தொடக்கம்
இ) அக்ஷராப்பியாசம் - 3) தாழை மடல்
ஈ) ஸ்ரீதாளபத்திரம் - 4) எழுத்துப் பயிற்சி
அ) 3, 2, 1, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 2, 1, 4, 3 ஈ) 4, 3, 1, 2

32. அ) ஆக்கும் வரை - 1) அரும்பு
ஆ) ஆக்கிய பின் - 2) அரிசி
இ) பூக்கும் வரை - 3) பூ
ஈ) பூத்தபின் - 4) சோறு
அ) 2, 4, 3, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 2, 4,1, 3 ஈ) 2, 3, 4, 1

33. ***புணர்ச்சி விதி தருக.*** எத்திசை

34. ***உறுப்பிலக்கணம் தருக.*** பொலிந்தான்

35. ***இலக்கணக்குறிப்பு தருக.*** அன்பும் அறமும்

36. ***வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.***
மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

37. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றைத் தெரிந்துக் கொண்டு நல்லனவற்றை கற்றுக் கொடுக்கும்.

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



35. பொருத்துக.

அ) களிற்றியானை நிரை - 1) 100 பாடல்கள்
ஆ) மணிமிடைப்பவளம் - 2) 180 பாடல்கள்
இ) நித்திலக் கோவை - 3) 120 பாடல்கள்

அ) 2, 1, 3 ஆ) 3, 2, 1 இ) 1, 3, 2 ஈ) 2, 3, 1 ☐

36. நடுங்கும் படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக்கூடியவர்
ஆ) மனத்திட்பம் உடையவர்
இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர் ☐

37. பொருத்துக.

அ) புதுமைப்பித்தன் - 1) கோவைத்தமிழ்
ஆ) சண்முகசுந்தரம் - 2) தஞ்சைத்தமிழ்
இ) தி. ஜானகிராமன் - 3) நெல்லைத்தமிழ்
ஈ) தோப்பில் முகம்மது மீரான் - 4) குமரித்தமிழ்

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 4, 1 ஈ) 4, 3, 2, 1 ☐

38. நிரப்புக : மயிலாப்பூர் தாலமி என்பவரால் .................................. எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

39. தென்னிந்தியாவின் நுழைவாயில் ..................................................

40. பாரதிதாசன் .................................................. கால்வாயில் நண்பர்களுடன் படகுப் பயணம் செய்தார்.

41. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் - இப்பாடலில் பயின்று வரும் அணி ..........................................

42. உறுப்பிலக்கணம் தருக : தொழுதனர்

43. இலக்கணக் குறிப்பு தருக : வெரீஇய

44. உள்ளொன்று - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

45. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :
வூட்டாண்ட வௌையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு

46. பொருள் வேறுபாடறிந்து சொற்றொடர் அமைக்க : புல் - புள்

47. பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு வேற்றுமை உருபு இணைத்து எழுதுக.
செல்வன் .............................. (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

48. நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
திரை, காண், கைத்தட்டல், மக்கள்

***கலைச்சொல் தமிழாக்கம் தருக.***

49. Cinematography

50. Allegation

★★★★★

Padasalai



பெயர் : பிரிவு : ப.எண் ☐☐☐☐☐☐☐

## ஒரு மதிப்பெண் தேர்வு - 3

### பன்னிரண்டாம் வகுப்பு

### தமிழ்

நேரம் : 1.00 மணி மதிப்பெண்கள் 50

**பலவுள் தெரிக:** 50x1=50

1. சென்னை மாகாணத்தின் முதல் தலைவர்

அ) எலி யேல் ஆ) தாலமி இ) தாமஸ் பிட் ஈ) பிரான்சிஸ் டே ☐

2. வேறுபட்டதைக் குறிப்பிடு.

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு ☐

3. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும் ☐

4. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல் ஆ) துறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது ☐

5. ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளி

அ) புனித தோமா தேவாலயப் பள்ளி ஆ) புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி
இ) கிறித்தவ உயர்நிலைப்பள்ளி ஈ) பிரிட்டிஸ் உயர்நிலைப் பள்ளி ☐

6. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த படைப்பு

அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு இ) அஞ்சுவண்ணம் காலனி ஈ) சாய்வு நாற்காலி ☐

7. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்.

அ) நோக்கியா மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள் ஏற்றுமதி
இ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு ஈ) இவை அனைத்தும் ☐

8. தவறான இணையைத் தேர்க.

| *பாவகை* | | *இலக்கியம்* |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள்வெண்பா | - | திருக்குறள் |

☐

9. மெய்ப்பாட்டுக்குரிய பாடலைத் தேர்க.

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு...
ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது...
இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்...
ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப.. ☐

10. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல் கோடரி
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1 ☐

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. சார்லி சாப்ளினின் சாதனைப் படம்

அ) மாடர்ன் டைம்ஸ் ஆ) தி கிரேட் டிக்டேட்டர் இ) லிட்டில் டிராம்ப் ஈ) தி கிட்

12. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் .... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

13. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞானமுனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

14. இந்தியாவின் முதல் பொது நூலகம்

அ) அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆ) கீழ்த்திசை சுவடிகள் நூலகம்
இ) கன்னிமாரா நூலகம் ஈ) சென்னை இலக்கியச் சங்கம்

15. பொருத்துக.

அ) ஆமந்திரிகை - 1) பட்டத்து யானை
ஆ) அரசு உவா - 2) மூங்கில்
இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1

16. சென்னையின் பொற்காலம் ............... ஆட்சிக்காலம்.

அ) எலி யேல் ஆ) தாமஸ் பிட் இ) பிரான்சிஸ் ஈ) எல்லீஸ்

17. 'விளியறி ஞமலி' என்று குறிப்பிடப்படும் விலங்கு

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

18. 'காலை இளம் வெயிலில் நன்றாக மேய, தும்பறுத்துத்
துள்ளிவரும் புதுவெயில்' - இக்கவிதையில் ............... பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்பாட்டுப் படிமம் ஈ) உருப்படிமம்

19. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

அ) காதை - 1) கந்தபுராணம்
ஆ) சருக்கம் - 2) சீவகசிந்தாமணி
இ) இலம்பகம் - 3) சூளாமணி
ஈ) படலம் - 4) சிலப்பதிகாரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 3, 1, 2 இ) 3, 4, 1, 2 ஈ) 3, 4, 2, 1

20. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) சீலி

21. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

22. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப்பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.
கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

23. ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை

அ) திருவாசகம் ஆ) திருமந்திரம் இ) திருவருட்பா ஈ) பெரியபுராணம்



24. பொருத்தி விடை தேர்க.

அ) ஐப்பசி - 1) திருவாதிரை விழா
ஆ) கார்த்திகை - 2) தைப்பூச விழா
இ) மார்கழி - 3) விளக்குத் திருவிழா
ஈ) தை - 4) ஓணவிழா

அ) 4, 2, 3, 1 ஆ) 4, 3, 1, 2 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 2, 1, 3

25. பொருத்துக.

அ) நகை - 1) சிறுமை
ஆ) இளிவரல் - 2) சிரிப்பு
இ) மருட்கை - 3) சினம்
ஈ) வெகுளி - 4) வியப்பு

அ) 2, 1, 4, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 2, 1, 3, 4

26. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

27. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

28. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்

அ) இளம்பூரணர் ஆ) நச்சினார்க்கினியர் இ) வேங்கடசாமி நாட்டார் ஈ) அடியார்க்கு நல்லார்

29. வி.சி. கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்

அ) அறிஞர் அண்ணா ஆ) எம்.ஜி. ஆர் இ) கருணாநிதி ஈ) பெரியார்

30. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்

அ) வாள் போல பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

31. பொருத்துக

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்
ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது
இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்
ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1

32. பொருத்துக.

அ) பாரதி - 1) ஆட்டனத்தி ஆதிமந்தி
ஆ) பாரதிதாசன் - 2) மருமக்கள் வழி மான்மியம்
இ) கவிமணி - 3) புரட்சிக்கவி
ஈ) கண்ணதாசன் - 4) குயில்பாட்டு

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 2, 1

33. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

34. பொருத்துக.

அ) பேரியாழ் - 1) 21 நரம்பு
ஆ) மகரயாழ் - 2) 17 நரம்பு
இ) சகோட யாழ் - 3) 16 நரம்பு
ஈ) செங்கோட்டியாழ் - 4) 7 நரம்பு

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 2, 1

Scanned by CamScanner

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

40. பொருத்துக.
    - அ) பேகன் - 1) பறம்பு
    - ஆ) பாரி - 2) மலையமான் நாடு
    - இ) காரி - 3) பொதினி
    - ஈ) ஆய் - 4) பொதியமலை

    அ) 2, 3, 1, 4 ஆ) 1, 3, 4, 2 இ) 3, 1, 2, 4 ஈ) 3, 2, 1, 4

41. தவறானதைத் தேர்க.
    - அ) அதியன் - 1) தகடூர்
    - ஆ) நள்ளி - 2) ஆனைமலை
    - இ) ஓரி - 3) கொல்லிமலை
    - ஈ) நல்லியக்கோடன் - 4) ஓய்மாநாடு

42. கோடை மழை சிறுகதையின் முதன்மை கதை மாந்தர்

    அ) ஆறுமுகம் ஆ) பாபு இ) குழந்தை ஈ) தம்பதியினர்

43. இலக்கணக்குறிப்பு தருக : காய் நெல்

44. பிரித்துப்புணர்ச்சி விதி தருக : எமையென

45. உறுப்பிலக்கணம் தருக : களைந்து

46. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக
    ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

47. மரபுச் சொற்களைத் தொடரில் அமைக்க.
    கண்துடைப்பு

48. விடைக்கேற்ற வினா அமைக்க.
    1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

49. கலைச் சொல் தமிழாக்கம் தருக : Teller

50. இவர் யார்?
    தமிழ் இமயம் என்று போற்றப்பட்டவர். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்ற 'தமிழ்வழிக்கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவியவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணியாற்றியவர். திருவள்ளுவர் விருது பெற்றவர்.

*****



| பெயர் : | பிரிவு : | ப.எண் |
|---|---|---|

# ஒரு மதிப்பெண் தேர்வு - 4

## பன்னிரண்டாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 1.00 மணி மதிப்பெண்கள் : 50

**பலவுள் தெரிக:** 50x1=50

1. இரவில் கடையாமத்தில் கூட உறங்காமல் விழித்திருந்ததாகப் புறநானூற்றில் குறிப்பிடப்படுபவர்

   அ) கரிகால் சோழன் ஆ) கோப்பெருஞ்சோழன் இ) சோழன் நலங்கிள்ளி ஈ) இராசராசன்

2. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

   அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
   இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

3. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

   அ) கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
   இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

4. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

   அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) இராமகிருஷ்ணன்

5. வேளாண்மை மேலாண்மைக் கூறுகளுள் பொருந்தாததைத் தேர்க.

   அ) சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல் ஆ) உரிய நேரத்தில் விதைத்தல்
   இ) மிக அதிக உரமிடுதல் ஈ) நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்

6. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

   அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

7. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

   அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
   இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

8. குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்ட செய்தி ................ இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   அ) பட்டினப்பாலை ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) புறநானூறு

9. 126 ஒற்றை வரிகளில் எழுதிய 'துளிகள்' என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்றவர்

   அ) ஹெரோடோடஸ் ஆ) ஹிராக்ளிடஸ் இ) ஹெர்குலிஸ் ஈ) ஹிராஸ்

10. தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற வெ. இறையன்பு படைப்பு

    அ) ஏழாவது அறிவு ஆ) வாய்க்கால் மீன்கள் இ) உள்ளொளிப்பயணம் ஈ) மூளைக்குள் சுற்றுலா

11. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - என்று பாடியவர்

    அ) கோவூர்கிழார் ஆ) பாணர் இ) கபிலர் ஈ) நக்கீரர்

12. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

    அ) கர்ணன் தோற்றான் போ ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி
    இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

13. 'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?

    அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப்பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

14. அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துவது ............துறையாகும்.

    அ) பொருண்மொழிக்காஞ்சி ஆ) செவியறிவுறூஉ
    இ) அறிவன் வாகை ஈ) அரச வாகை

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15. பிசிராந்தையார் எந்த அரசனுக்கு அறிவுரை சொல்லக்கூடிய உயர் நிலையில் இருந்தார்?
அ) அறிவுடை நம்பி ஆ) கோப்பெருஞ்சோழன்
இ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ) பாண்டியன் நன்மாறன்

16. பண்புக்குறியீடுகளைக் கதை மாந்தர்களோடு பொருத்துக.
அ) அறம் - 1) கர்ணன்
ஆ) வலிமை - 2) மனுநீதிச்சோழன்
இ) நீதி - 3) பீமன்
ஈ) வள்ளல் - 4) தருமன்
அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 1, 2

17. "வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்" - இவ்வடிகளில் 'வரி' என்பதைக் குறிக்க புலவர் கையாண்ட சொல்
அ) வரிசை ஆ) கல் இ) பிண்டம் ஈ) நச்சின்

18. கல்வெட்டில் .................. என்ற சொற்களைப் படித்தவுடன் ஆசிரியருக்கு வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது.
அ) யாற்றூர் செங்காயபன் ஆ) கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
இ) பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோ ஈ) சமணத்துறவி

19. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

20. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள் ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது

21. ".... அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் ........" - இக்கல்வெட்டைப் பொறித்தவர்கள்
அ) இரும்பொறை மன்னர்கள் ஆ) பாண்டிய மன்னர்கள்
இ) நாயக்க மன்னர்கள் ஈ) சோழ மன்னர்கள்

22. குறியீடுகளைப் பொருத்துக.
அ) பெண் - 1) சமாதானம்
ஆ) புறா - 2) வீரம்
இ) தராசு - 3) விளக்கு
ஈ) சிங்கம் - 4) நீதி
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

